RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 132 | மே.18, 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## சென்னையில் சட்டம் ஒழுங்கு நிலை தொடர்பாக போலீஸ் அதிகாரிகளுடன் காவல் ஆணையர் ஆலோசனை



சென்னை: மே.18-

சென்னையில் சட்டம் ஒழுங்கு நிலை தொடர்பாக போலீஸ் அதிகாரிகளுடன் காவல் ஆணையர் அருண் ஆலோசனை மேற்கொண்டார். மேலும், குற்றச் செயல்களில் யார் ஈடுபட்டாலும் அவர்கள் மீது பாரபட்சம் இன்றி நடவடிக்கை எடுக்க போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.


சென்னையில் கொலை, கொள்ளை, வழிப்பறி, திருட்டு, மோசடி உட்பட அனைத்து வகையான குற்றச் செயல்களையும் முற்றிலும் தடுக்க காவல் ஆணையர் அருண் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளார். ரவுடிகள், தலைமறைவு குற்றவாளிகளை கைது செய்து சிறையில் அடைத்து வருகிறார். தொடர் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் குண்டர் சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டு வருகின்றனர்.

இருப்பினும், ஆங்காங்கே சில குற்றச் செயல்கள் நடைபெற்று வருகின்றன. இதையும் முற்றிலும் தடுக்கும் வகையில் போலீஸ் அதிகாரிகளுடன் காவல் ஆணையர் அருண், வேப்பேரியில் உள்ள காவல் ஆணையர் அலுவலகத்தில் நேற்று ஆலோசனை நடத்தினார். இதில், கூடுதல் காவல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் நுண்ணறிவுப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் திருவல்லிக்கேணி, அடையாறு, பரங்கிமலை, மயிலாப்பூர், புளியந்தோப்பு உட்பட சென்னையில் உள்ள 12 காவல் மாவட்ட அதிகாரிகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், கைது விவரம், குண்டர் சட்டத்தில் ரவுடிகளை சிறையில் அடைத்த விவரம், நிலுவையில் உள்ள குற்ற வழக்கு விவரம் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. அப்போது, போலீஸ் அதிகாரிகளுக்கு சில ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் காவல் ஆணையர் வழங்கினார்.

மேலும், குற்றச்செயல்களில் யார் ஈடுபட்டாலும் அவர்கள் மீது பாரபட்சமின்றி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்கள் அளிக்கும் புகார் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். இதேபோல் போலீஸாரோ, போலீஸ் அதிகாரிகளோ தவறு செய்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ளார். அதோடு மட்டும் அல்லாமல் சிறப்பாக பணி செய்த அதிகாரிகளுக்கு பாராட்டுகளையும் காவல் ஆணையர் தெரிவித்துள்ளார்.

## ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் 'ஸ்லீப்பர் செல்' ஆக இருந்த 2 பேர் மும்பையில் கைது!




மும்பை: மே.18-

ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாத அமைப்பின் 'ஸ்லீப்பர் செல்' ஆக இருந்த இரண்டு பேரை மும்பை விமான நிலையத்தில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் கைது செய்தனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறுகையில், "புனேவில் ஐஇடி தயாரித்தது, சோதனை செய்தது தொடர்பான 2023 ம் ஆண்டு வழக்கில் தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் இருவரும் தேடப்பட்டு வந்தனர். கைதானவர்கள் அப்துல்லா ஃபைஸ் சேக் என்கிற டயபர்வாலா மற்றும் தல்ஹா கான் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும், இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் இருந்து இந்தியா திரும்பியபோது, மும்பை சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர்" என்று தெரிவித்தனர்.

இதனிடையே, தேசிய புலனாய்வு முகமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'கைது செய்யப்பட்ட இருவரும் 2 ஆண்டுகளுக்கும் மேலாக தலைமறைவாக இருந்து வந்தனர். இவர்களுக்கு எதிராக மும்பை என்ஐஏ சிறப்பு நீதிமன்றம் ஜாமீனில் வரமுடியாத வாரன்ட் பிறப்பித்துள்ளது. இந்த இரண்டு பேர் குறித்து தகவல் கொடுப்பவர்களுக்கு ரூ.3 லட்சம் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.

ஏற்கெனவே கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருக்கும் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் புனே ஸ்லீப்பர் செல் உறுப்பினர்களுடன் இணைந்து இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் மீது குற்றச்சதி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வன்முறை மற்றும் பயங்கராவாதம் மூலமாக நாட்டில் இஸ்லாம் ஆட்சியை நிறுவும் ஐஎஸ்ஐஎஸ் கொள்கைகளுக்கு துணைபுரிவதற்காக இந்தியாவின் அமைதி மற்றும் மதநல்லிணக்கத்தை சீர்குலைக்க சதி செய்தனர்.

தற்போது கைது செய்யப்பட்ட இருவரும் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு காவலில் இருப்பவர்களுடன் புனேவில் வாடகைக்கு வீடு எடுத்து தங்கி ஐஇடிகள் தயாரித்துள்ளனர். கடந்த 2022-23 காலக்கட்டத்தில் அவர்கள் வெடிகுண்டு தயாரிப்பதற்கான பயிற்சி பட்டறையை ஒருங்கிணைத்து பங்கேற்றும் உள்ளனர். மேலும், தாங்கள் தயாரித்த ஐஇடிகளை பரிசோதிக்க வெடிகுண்டுகளை வெடிக்கச் செய்துள்ளனர்.

இந்தியாவில் ஐஎஸ்ஐஎஸ் பயங்கரவாத திட்டங்களை முறியடிக்கும் முயற்சியில் அதன் செயல்பாடுகளை என்ஐஏ தீவிரமாக விசாரித்து வருகிறது. இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள 10 பேர் மீதும் சட்டவிரோத தடுப்பு நடவடிக்கைகள் சட்டம், வெடிபொருள்கள் சட்டம், ஆயுதச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அண்ணா பல்கலைக்கழகத்துக்கு 17வது முறையாக வெடிகுண்டு மிரட்டல்




சென்னை: மே.18-

கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்துக்கு 17வது முறையாக வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் மின்னஞ்சல் முகவரிக்கு நேற்று முன்தினம் இரவு மின்னஞ்சல் ஒன்று வந்தது. அதில், அண்ணா பல்கலைக்கழக வளாகத்திலும், அந்த வளாகத்தில் உள்ள கிண்டி பொறியியல் கல்லூரியிலும் அதிக திறன் கொண்ட வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது. அது வெள்ளிக்கிழமை வெடிக்கும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த பதிவாளர் அலுவலக ஊழியர்கள், இது தொடர்பாக கோட்டூர்புரம் போலீஸாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து போலீஸார் வெடிகுண்டுகளை கண்டறிந்து அகற்றும் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் உடன் விரைந்து வந்து சோதனை நடத்தினர். அப்போது எந்த வெடிப் பொருளும் கண்டெடுக்கப்படவில்லை.

இதையடுத்து, வதந்தியை பரப்பும் நோக்கத்துடன் மிரட்டல் மின்னஞ்சல் அனுப்பப்பட்டது தெரியவந்தது. அண்ணா பல்கலைக்கழகத்துக்கு கடந்த ஒரு வருடத்தில் மட்டும் 17 முறை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆவடி சிவிஆர்டிஇ நிறுவனத்தில் போர் வாகன சோதனை மையம் திறப்பு



சென்னை: மே.18-

ஆவடியில் போர் வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (சிவிஆர்டிஇ) சார்பில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள போர் வாகன மற்றும் ஆயுத அமைப்பு சோதனை மையத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறை செயலர் மற்றும் டிஆர்டிஓ தலைவர் டாக்டர் சமீர் வி.காமத் திறந்து வைத்தார்.

சென்னையை அடுத்த ஆவடியில் உள்ள போர் வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (சிவிஆர்டிஇ) சார்பில், ஆவடி அடுத்த வெள்ளனூரில் புதிதாக போர் வாகன மற்றும் ஆயுத அமைப்பு சோதனை (ஏடபிள்யூடிசி) மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறை செயலர் மற்றும் டிஆர்டிஓ தலைவர் டாக்டர் சமீர் வி காமத் இன்று (மே 17) திறந்து வைத்தார்.

போர் வாகன மற்றும் ஆயுத அமைப்பு சோதனை மையத்தில் 26 வகையான சோதனை தடங்கள் உள்ளன. அவை கவச வாகனங்களின் முழுமையான வாகன செயல்திறனை சோதிக்கும் திறன் வாய்ந்தவையாகும். இந்த செயல்திறன் சோதனைகள், சிவிஆர்டிஇ நிறுவனத்தின் மட்டுமல்லாது வேறு எந்த வடிவமைப்பு நிறுவனத்தாலும் வடிவமைக்கப்பட்ட கவச வாகனங்களையும் சோதனைகளுக்காக வழங்குவதற்கு முன்பு, அவற்றின் நம்பகத் தன்மையை சரிபார்க்க உதவும்.

மேலும், சிவிஆர்டிஇ நிறுவனத்தின் சிறப்பு இயந்திர சோதனை மையத்தையும் டிஆர்டிஓ தலைவர் திறந்து வைத்தார். சிவிஆர்டிஇ நிறுவன வளாகத்துக்குள் முன்னாள் முன்னாள் குடியரசு தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் நினைவுச் சின்னத்தையும் டிஆர்டிஓ தலைவர் டாக்டர் சமீர் வி.காமத் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினர். பின்னர், டிஆர்டிஓ தலைவர் சமீர் வி காமத், சிவிஆர்டிஇ நிறுவனத்தின் தற்போதைய திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தார்.

கவச போர் வாகனங்களுக்கான புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் விசைத் திறன் தொடர்பான அம்சங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இந்நிகழ்வில், தலைமை இயக்குநர் (ஆயுதங்கள் மற்றும் போர் பொறியியல்) டாக்டர் பிரதீக் கிஷோர், தலைமை இயக்குநர் (வளங்கள் மற்றும் மேலாண்மை) மனு கோருல்லா, சிவிஆர்டிஇ நிறுவனத்தின் இயக்குநர் ஜே. ராஜேஷ் குமார், சிவில் பணிகள் மற்றும் எஸ்டேட்ஸ் இயக்குநரகத்தின் இயக்குநர் டாக்டர் பிஷ்வஜீத் சௌபே, கவச வாகனங்கள் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சஞ்சய் திவேதி மற்றும் பலர் பங்கேற்றனர்.

## தமிழகத்தில் 5 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்

சென்னை: மே.18-

மே 18ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மே 19ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, ஈரோடு, தருமபுரி, சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி மற்றும் திருச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மே 20ம் தேதி, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

மே 21ம் தேதி, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மே22ம் தேதி, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

மே 23ம் தேதி, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## கால்நடைகளுக்கு ஆண்டு முழுவதும் பசுந்தீவனங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் : அமைச்சர் அறிவுறுத்தல்



சென்னை: மே.18-

கால்நடைகளுக்கு ஆண்டு முழுவதும் பசுந்தீவனங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உத்தரவிட்டுள்ளார். தமிழக கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அலுவலக மாநாட்டுக் கூட்ட அரங்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், 34 அரசு ஊழியர்களின் பதவி உயர்வு ஆணைகளை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வழங்கினார்.

உள்கட்டமைப்பு பணிகள்: பின்னர், கால்நடை பராமரிப்புத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில், கால்நடைகளின் நலனைப் பாதுகாக்கவும், விவசாயிகளின் வருமானம் பெருக்கும் நோக்கத்தோடும் செயல்படுத்தப்பட்டு வரும் துறையின் முக்கிய நடவடிக்கைகள், திட்டங்கள், உட்கட்டமைப்புகள், பண்ணைகள் குறித்த செயல்பாடுகள் மற்றும் துறையின் இதர பணிகள் குறித்து ஆய்வு அமைச்சர் மேற்கொண்டார்.

மேலும், துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு உட்கட்டமைப்பு பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவருமாறு அறிவுறுத்தினார். ஆண்டு முழுவதும் தட்டுப்பாடின்றிப் பசுந்தீவனம் கிடைக்கும் வகையில், பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்குமாறு வலிறுத்தினார்.

ஆண்டுக்கு ஒரு கன்று: பாலினம் பிரிக்கப்பட்ட உறைவிந்து செயற்கை முறை கருவூட்டல் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்த அமைச்சர், ஆண்டுக்கு ஒரு கன்று எனும் இலக்கை அடைவது குறித்து கால்நடை வளர்ப்போருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் அறிவுறுத்தினார். ஆய்வுக் கூட்டத்தில், துறைச் செயலர் நா.சுப்பையன், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குனர் இரா.கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## "டாஸ்மாக் ஊழல் கற்பனையை நியாயப்படுத்தவே அமலாக்கத் துறை சோதனை" அமைச்சர் முத்துசாமி கண்டனம்



சென்னை: மே.18-

டாஸ்மாக் நிறுவனத்தின் செயல்பாடுகளில் முறைகேடுகள் நடைபெற்றதற்கான எந்தவிதமான ஆதாரமும் கிடைக்காத நிலையில், 1000 கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றதாக ஒரு கற்பனைச் செய்தியை அமலாக்கத் துறை வெளியிட்டது. இவ்வாறு வெளியிட்ட தவறான அறிக்கையை நியாயப்படுத்துவதற்காக, அமலாக்கத் துறை டாஸ்மாக் நிறுவன அலுவலர்களைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகிறது.

இந்த அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு, தமிழக அரசின் சார்பாக எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன், என்று வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் முத்துசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சென்ற அதிமுக ஆட்சிக் காலத்தில் லஞ்ச ஒழிப்புத் துறையால் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை அடிப்படையாகக் கொண்டு, திமுக ஆட்சியில் டாஸ்மாக் நிறுவனத்தில் முறைகேடுகள் நடைபெற்றதைப் போன்று சித்தரிப்பதற்காக, அரசியல் உள்நோக்கத்தோடு, கடந்த மாதம் டாஸ்மாக் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் அமலாக்கத் துறை சோதனைகளை மேற்கொண்டது.

இந்த சோதனைகளின் போது, டாஸ்மாக் நிறுவனத்தின் செயல்பாடுகளில் முறைகேடுகள் நடைபெற்றதற்கான எந்தவிதமான ஆதாரமும் கிடைக்காத நிலையில், ஆயிரம் கோடி ருபாய் ஊழல் நடைபெற்றதாக ஒரு கற்பனைச் செய்தியை அமலாக்கத் துறை வெளியிட்டது. இவ்வாறு வெளியிட்ட தவறான அறிக்கையை நியாயப்படுத்துவதற்காக, அமலாக்கத் துறை டாஸ்மாக் நிறுவன அலுவலர்களைத் தொடர்ந்து துன்புறுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, நேற்று டாஸ்மாக் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் சிலருடைய வீடுகளில் சோதனைகளை அமலாக்கத் துறை மேற்கொண்டுள்ளது. இந்த சோதனைகளின் போதும், எந்தவிதமான ஆதாரங்களும் கிடைக்காத நிலையில், அரசு அலுவலர்களை அமலாக்கத் துறை தொடர்ந்து துன்புறுத்தியும், கட்டாயப்படுத்தியும் வருகிறது.

பல அமலாக்கத் துறை வழக்குகளில், உச்சநீதிமன்றம் விதித்துள்ள வழிமுறைகளைத் தொடர்ந்து மீறி, இவ்வாறு அமலாக்கத் துறை மேற்கொண்டுவரும் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளுக்கு, தமிழக அரசின் சார்பாக எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகத் தேவையான அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு, நமது அலுவலர்களுடன் தமிழக அரசு எப்போதும் துணை நிற்கும், என்று அவர் கூறியுள்ளார்.



## காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் பிரம்மோற்சவ தேரோட்டம்: திரளான பக்தர்கள் வழிபாடு

காஞ்சிபுரம், மே.18-

காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் வைகாசி பிரம்மோற்சவத்தில் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சாலைகளில் திரண்டு பெருமாளை வழிபட்டனர்.

காஞ்சிபுரத்தில் அத்திவரதர் வைபவம் மூலம் உலகப் புகழ் பெற்றது வரதராஜ பெருமாள் கோயில். இந்தக் கோயில் 108 வைணவ திவ்யா தேசங்களில் ஒன்று. இந்தக் கோயிலின் வைகாசி பிரம்மோற்சவம் கடந்த 12ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இந்த பிரம்மோற்சவத்தையொட்டி காலை, மாலை இரு வேளையும் பெருமாள் வீதியுலா வரும் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த பிரம்மோற்சவத்தில் புகழ்பெற்ற உற்சவங்கள் கருட சேவை உற்சவம் மற்றும் தேரோட்டம் ஆகும். இந்த உற்சவங்களைக் காண காஞ்சிபுரம் மாவட்டம் மட்டுமின்றி, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து பொதுமக்கள் காஞ்சிபுரத்துக்கு வருகை தருவர். கருட சேவை கடந்த 14ம் தேதி நடைபெற்று முடிந்த நிலையில் (மே 17) தேரோட்டம் நடைபெற்றது.

இந்த தேரோட்டத்தையொட்டி அதிகாலையில் சாமி புறப்பட்டு தேரடியில் உள்ள தேருக்கு வந்தது. காலை 6 மணிக்கு மேல் திருத்தேர் புறப்பட்டது. அங்கிருந்து ராஜ வீதிகள் வழியாக வந்த தேர் மீண்டும் நிலையை வந்தடைந்தது. சுமார் 2 லட்சம் பேர் இந்த தேரோட்டத்தை கண்டு வழிபட்டனர்.

இந்தத் தேரோட்டம் காரணமாக காஞ்சிபுரம் நகரின் முக்கிய வீதிகளில் மக்கள் திரண்டதால் போக்குவரத்து ஸ்தம்பித்தது. இதனைத் தொடர்ந்து காஞ்சிபுரத்தில் ஆங்காங்கே 5 தற்காலிக பேருந்து நிறுத்தங்கள் அமைக்கப்பட்டு, பொதுமக்கள் இறக்கிவிடப்பட்டனர். தற்காலிக கடைகள் பலவும் இந்த விழாவையொட்டி அமைக்கப்பட்டிருந்தன.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.11.34 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, மே.18-

கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தோவாளை வட்டம் உடையடி பகுதியில் ஆதிதிராவிடர் நல நடுநிலைப்பள்ளியில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, இன்று (17.05.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்



கன்னியாகுமரி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி கழகத்தின் மூலம் புதிய வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள், கிராம அறிவு சார் மையம் உள்ளிட்டவைகள் கட்டப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் தாட்கோ மூலம் உடையடி ஆதிதிராவிடர்நல நடுநிலைப்பள்ளியில் ரூ.1.63 கோடி மதிப்பில், 8 வகுப்பறையும், ரூ.18.60 இலட்சம் மதிப்பீட்டில் தக்கலை ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியிலும், ரூ.21.00 இலட்சம் மதிப்பில் பேச்சிப்பாறை பழங்குடியினர் பெண்கள் பள்ளி விடுதியிலும், ரூ.22.50 இலட்சம் மதிப்பில் பத்துகாணி பழங்குடியினர் பெண்கள் பள்ளி விடுதியிலும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், ரூ.1.59 இலட்சம் மதிப்பில் மணலோடை பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளியில் 4 வகுப்பறைகளும் 1 அறிவியல் ஆய்வு கூடமும், ரூ.2.62 கோடி மதிப்பில் பத்துகாணி பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளியில் 6 வகுப்பறைகளும், 2 அறிவியல் சோதனை கூடங்களும், ரூ.55 இலட்சம் மதிப்பில் கலிங்கராஜபுரம் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் 1 அறிவியல் ஆய்வுக்கூடமும், ரூ.2.59 கோடி மதிப்பில் வாழையத்துவயல் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் 6 வகுப்பறைகளும் 2 கழிவறைகளும், ரூ.77.89 இலட்சம் மதிப்பில் ஆரல்வாய்மொழி கிராமத்தில் அறிவு சார் மையமும் கட்டப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து பேச்சிப்பாறை பழங்குடியினர் மேல்நிலைப்பள்ளியில் ரூ.8.40 இலட்சம் மதிப்பில் பள்ளி தலைமை ஆசிரியர் / காப்பாளி இல்லம் கட்டி முடிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. ரூ.24.60 இலட்சம் மதிப்பில் பூதப்பாண்டி ஆதிதிராவிடர் நல பெண்கள் விடுதியும், ரூ.42.55 இலட்சம் மதிப்பில் மணலோடை பழங்குடியினர் பள்ளியில் ஆண்கள் விடுதி மறுசீரமைப்பு செய்யப்பட்டு வருகிறது. ரூ.2.60 இலட்சம் மதிப்பில் நாகர்கோவில் ஆதிதிராவிடர் நல கல்லூரியில் ஆண்கள் விடுதிகள் யூனிட் 1 மற்றும் யூனிட் 2 -ல் கழிவறைகள் பணிகள் என மொத்தம் ரூ.11.34 கோடி மதிப்பில் நடைபெற்று வருகிறது.

அதன்ஒருபகுதியாக தோவாளை வட்டம் உடையடி ஆதிதிராவிடர்நல நடுநிலைப்பள்ளியில் ரூ.1.63 கோடி மதிப்பில், 8 வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மாணாக்கர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், பணிகளை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்கள், ஒப்பந்தார்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெற்று வரும் பணிகள் அனைத்தையம் 2025 2026ஆம் கல்வி ஆண்டில் மாணவர் மாணவியர் சேர்க்கைக்கு முன்பாக முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு, விடுதிகள் தயார் நிலையில் இருக்க வேண்டுமென துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் தி.மோகனா, துறை அலுவலர்கள், ஒப்பந்தாரர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## கூட்டணி பற்றி எடப்பாடி பழனிச்சாமி முடிவு எடுப்பார் எடப்பாடி பழனிச்சாமியின் முடிவுக்கு அனைவரும் கட்டுப்படுவோம் - நத்தம் விஸ்வநாதன்

பழனி, மே.18-

கூட்டணி பற்றி எடப்பாடி பழனிச்சாமி முடிவு எடுப்பார் எடப்பாடி பழனிச்சாமியின் முடிவுக்கு அனைவரும் கட்டுப்படுவோம் என நத்தம் விஸ்வநாதன் தெரிவித்துள்ளார் ஓ.பி.எஸ், டி.டி.வி உடன் கூட்டணியில் இல்லை என நேற்று நத்தம் விஸ்வநாதன் கூறியிருந்தார் நத்தம் விஸ்வநாதன் கூட்டணி பற்றி மாற்றி மாற்றி பேசுவதால் தொண்டர்கள் குழப்பம் அடைந்துள்ளனர்.



பழனியில் எடப்பாடி பழனிச்சாமி பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அதிமுக துணை பொதுச் செயலாளர் நத்தம் விஸ்வநாதன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். சலவைத் தொழிலாளர்களுக்கு தேய்ப்பு பெட்டி, ஆட்டோ தொழிலாளர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு சீருடைகள், நகராட்சி தூய்மை பணியாளர்கள் 50க்கும் மேற்பட்டோருக்கு புத்தாடைகள் அரிசி உள்ளிட்டவை வழங்கப்பட்டது. மேலும் கிரிக்கெட் வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் அதிமுக நிர்வாகிகள் சார்பில் வழங்கப்பட்டது. நிகழ்ச்சி முடிந்து செய்தியாளர்களிடம் பேசிய அதிமுக துணை பொதுச் செயலாளர் நத்தம் விஸ்வநாதன் ; முன்னாள் அமைச்சர் வீடுகளில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடைபெறுவது குறித்த கேள்விக்கு சட்டம் தனது கடமையை செய்கிறது எனவும், அமலாக்கத்துறை தனது கடமையை செய்து சோதனை செய்கிறது சோதனை முடிவில் குற்றவாளிகள் பிடிபடுவார்கள் என தெரிவித்துள்ளார். தேசிய ஜனநாயகக் கூட்டணியில் ஓபிஎஸ் டிடிவி உள்ளதாக தெரிவிப்பது குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு கூட்டணி பற்றி எடப்பாடி பழனிச்சாமி முடிவெடுப்பார் என்றும், எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் முடிவிற்கு அனைவரும் கட்டுப்படுவோம் என நத்தம் விஸ்வநாதன் என்று தெரிவித்துள்ளார். நேற்று டிடிவி மற்றும் ஓபிஎஸ் உடன் எந்த காலத்திலும் கூட்டணி கிடையாது என நத்தம் விஸ்வநாதன் தெரிவித்திருந்தார் இன்று தனது கருத்தை மாற்றிக் கொண்டுள்ளதால் தொண்டர்கள் குழப்பமடைந்துள்ளனர். மேலும் நீலகிரி சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், மலர் கண்காட்சி துவக்கி வைத்தார் முதல்வர், ஆனால் தமிழக முதல்வர் எப்போது மக்களைப் பற்றி கவலைப்படுவதில்லை, எனவும் தான் பெற்ற மக்களைப் பற்றி மட்டுமே சிந்திப்பதாகவும், குடும்பத்துடன் ஜாலியாக ஊட்டிக்கு சுற்றுலா சென்றுள்ளதாக நத்தம் விஸ்வநாதன் விமர்சனம் செய்துள்ளார்.

## திண்டுக்கல் அருகே ஜல்லிக்கட்டு 300 வீரர்கள் மல்லுக்கட்டு

திண்டுக்கல், மே.18-

நத்தம் அருகே, சங்கரன்பாறையில் கோயில் திருவிழாவையொட்டி இன்று நடந்த ஜல்லிக்கட்டில் 600 காளைகள், 300 வீரர்கள் களமிறங்கி அதகளம் செய்தனர். திண்டுக்கல் மாவட்டம், நத்தம் அருகே, சேத்தூர் ஊராட்சி சொறிப்பாறைப்பட்டி சங்கரன்பாறையில் முத்துமாரியம்மன் கோவில் திருவிழாவையொட்டி இன்று ஜல்லிக்கட்டு நடைபெற்றது. இதில், மதுரை, தேனி, திருச்சி, சிவகங்கை, புதுக்கோட்டை, சேலம் உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த 650 காளைகளும், 300 மாடுபிடி வீரர்களும் முன்பதிவு செய்து களமிறங்கினர்.

முன்னதாக இன்று காலையில் காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கு மருத்துவப் பரிசோதனை நடைபெற்றது. காலை 8 மணி அளவில் ஜல்லிக்கட்டு போட்டி தொடங்கியது. வாடிவாசலில் இருந்து முதலில் கோயில் காலை அவிழ்த்துவிடப்பட்டது. அதன்பின் ஒவ்வொன்றாக காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. திமிலை உயர்த்தி தீரம் காட்டிய காளைகளை, வீரர்கள் தீரத்துடன் அடக்கினர்.

சில காளைகள் யாருக்கும் பிடி கொடுக்காமல் களத்தில் நின்று விளையாடின. காலையில் தொடங்கிய ஜல்லிக்கட்டு மாலை 5 மணி வரை நடைபெற்றது. வெற்றி பெற்ற வீரர்களுக்கும், காளைகளின் உரிமையாளர்களுக்கும் பித்தளை குத்துவிளக்கு, சைக்கிள், டைனிங் டேபிள், சில்வர் அண்டா, ரொக்கப் பரிசு உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் விழாக்குழு சார்பில் வழங்கப்பட்டது. ஏராளமான கிராம மக்கள் ஜல்லிக்கட்டு போட்டியை கண்டுகளித்தனர்.



## ஏழுமலையானை தரிசிக்க ஆகஸ்ட் மாத டிக்கெட் வெளியீடு

திருமலை, மே.18-

ஆகஸ்ட் மாதம் திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க, வரும் 19ம் தேதி முதல் ஆன்லைன் டிக்கெட்டுகள் மற்றும் இலவச டோக்கன்களை திருப்பதி தேவஸ்தானம் தனது இணையதளத்தில் வெளியிட உள்ளது. அதன்படி 19ம் தேதி காலை 10 மணி முதல் 21ம் தேதி காலை 10 மணி வரை குலுக்கல் முறை ஆர்ஜித சேவைகளுக்கு பக்தர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம்.

22ம் தேதி காலை 10 மணிக்கு கல்யாண உற்சவம், ஊஞ்சல் சேவை, ஆர்ஜித பிரம்மோற்சவம், சகஸ்ர தீப அலங்கார சேவை மற்றும் வருடாந்திர பவித்ரோற்சவத்திற்கு முன்பதிவு செய்யலாம். 23ம் தேதி காலை 10 மணிக்கு அங்கப்பிரதட்சண டோக்கன் வெளியாக உள்ளது. 24ம் தேதி காலை 10 மணிக்கு ரூ.300 சிறப்பு தரிசன டிக்கெட் தொடங்குகிறது.



## தொடர் மழை எதிரொலி குன்னூர் வட்டார பகுதியில் தேயிலை தோட்டங்களில் மகசூல் அதிகரிப்பு

குன்னூர், மே.18-

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் உட்பட பல்வேறு பகுதிகளில் தொடர் மழையால் தேயிலை தோட்டங்களில் மகசூல் அதிகரித்து வரும் நிலையில் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்தது.

இதன் காரணமாக, தேயிலை மற்றும் மலைத்தோட்ட காய்கறி தோட்டங்களில் மகசூல் பாதிப்பு ஏற்பட்டது. மேலும் ஈரப்பதம் படிப்படியாக குறைந்ததால், போதிய எடை இல்லாமல் விவசாயிகள் தவித்து வந்தனர்.


வெயிலின் தாக்கத்தால் தேயிலை தோட்டங்களில், பசுந்தேயிலை மகசூலும் பாதிக்கப்பட்டதுடன், அதன் மகசூல் பாதிப்பு ஏற்பட்டு, தேயிலையின் விலையும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் ஆறுகள் மற்றும் ஓடைகளின் அருகில் இருக்கும் தேயிலை தோட்டங்களுக்கு ‘ஸ்பிரிங்லர்’ மூலம் தண்ணீர் பாய்ச்சி தேயிலை செடிகளை பாதுகாக்கும் நடவடிக்கையில் விவசாயிகள் ஈடுபட்டனர்.

இதனிடையே தற்போது கடந்த ஒரு வார காலமாக நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் உட்பட பல்வேறு பகுதிகளில் பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் தேயிலை விவசாயிகள் மட்டுமின்றி மலைத்தோட்ட காய்கறி விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## இந்த ஆண்டு கோடைக்கால மின் தேவை குறைவு: மின்துறை அமைச்சர் சிவசங்கர் தகவல்

சென்னை, மே.18-

“கோடைக்கால மின் தேவை, கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாக உள்ளது. இதனால், இந்த ஆண்டு கோடை மின் தேவையை எளிதாக பூர்த்தி செய்ய முடியும்” என தமிழக மின்துறை அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.



சென்னை, அண்ணாசாலையில் உள்ள மின்வாரிய தலைமை அலுவலகத்தில் இயங்கி வரும் மின்நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தை, மின்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் இன்று ஆய்வு செய்தார். அப்போது, தற்போது நிலவி வரும் கடும் கோடை வெப்பம், பல்வேறு மாவட்டங்களில் கடும் சூறாவளி காற்று மற்றும் கனமழை காரணமாக மின்னகத்தில் பதிவான மின்சாரம் தொடர்பான பொதுமக்களின் புகார்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தது ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் சிவசங்கர் கூறியது, “மின்னகத்தில், பொதுமக்களிடமிருந்து புகார்களை பெறுவதற்காக, 3 ஷிப்டுகளில், ஒவ்வொரு ஷிப்ட்டுக்கும் 3 மேற்பார்வையாளர்கள் உட்பட 94 பணியாளர்களை கொண்டும், 45 மின்பகிர்மான வட்டங்களிலும் நாள் ஒன்றுக்கு 4 பேர் வீதம் 176 நபர்களை கொண்டும் 24ஜ்7 மணி நேரமும் இயங்கி வருகிறது. மேலும், 9498794987 எண்ணுக்கு வரும் புகார்களை பெறுவதற்கு வசதியாக மின்னகத்தில் பணியாளர்கள் எண்ணிக்கை 65ல் இருந்து 94 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யுமாறும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் வீசிய சூறைக் காற்று மற்றும் கனமழை பெய்த காரணத்தால் மின்கம்பங்கள் சாய்ந்ததால் சில இடங்களில் மின்தடை ஏற்பட்டது. இதனால், திருநெல்வேலி மாநகராட்சி மின்தகன மேடையில் உயிரிழந்த ஒருவரின் உடலை கொண்டு வந்து தகனம் செய்வதற்கு 2 மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும், 2 மணி நேரத்துக்குள் மின்விநியோகம் சரி செய்யப்பட்டு அந்த உடல் தகனம் செய்யப்பட்டது.

சில இடங்களில் குறைந்த மின்னழுத்த பிரச்சினை (லோ வோல்டேஜ்) ஏற்பட்டு வருகிறது. அங்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பழைய மின்மாற்றிகளை மாற்றி அமைப்பது, துணை மின்நிலையங்களில் மின்விநியோகத்தை சீரமைப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

கோடைக்கால மின் தேவை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு குறைவாக உள்ளது. கோடை மழை பெய்து வருவது, காற்றாலை சீசன் தொடங்கி இருப்பது ஆகியவற்றால் இந்த ஆண்டு கோடை மின் தேவையை எளிதாக பூர்த்தி செய்ய முடியும். காற்றாலை மின்சாரம் கொள்முதல் செய்யப்படும் விஷயத்தில், மின்வாரியத்துக்கு எவ்வளவு தேவை உள்ளதோ அதைப் பெற்று பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது” என்று அமைச்சர் கூறினார்.

இந்த ஆய்வின் போது, மின்வாரிய தலைவர் ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மின்னுற்பத்தி கழக மேலாண்மை இயக்குநர் ஆல்பி ஜான் வர்கீஸ், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

# தென் தமிழகத்தில் முதன் முறையாகமீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் சிக்கலான மூளை அலர்சியம் சவாலான சிகிச்சை

மதுரை, மே.18

மூன்று வேறுபட்ட இரத்தக்குழாய்களுள் சிக்கலான மூளை Brain aneurysm கண்டறியப்பட்ட இரு நடுத்தர வயது பெண்களுக்கு ஒற்றை இரத்தநாள சிகிச்சை அமர்வில் மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் மருத்துவர்களால் வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்பட்டிருக்கிறது. மூளை நரம்பியல் கிரக்கநாள் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி Endovascular Coiling of Aneurysms என இத்தொழில்நுட்பம் அழைக்கப்படுகிறது. தற்போது எந்த சிக்கல்களும் இல்லாமல் இந்த இரு நோயாளிகளும் மீண்டு குணமடைந்து வருகின்றனர் வாழ்க்கையின் அடுத்த அத்தியாயத்தை அடிப்புடன் எதிர்கொள்ள அவர்கள் இப்போது தயாராக இருக்கின்றனர்.

Endovascular Coiling of Aneurysms என அறியப்படுகிற நுண்துளை செயல்முறையை, மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணரான டாக்டர் கௌதம் குஞ்சா மேற்கொண்டார். இண்டெர்வென்ஷனல் ரேடியாலஜி துறையின் தலைவரும், முதுநிலை நிபுணருமான டாக்டர். முகுந்தராஜன், நரம்பியல் அறுவை சிகிச்சை துறையின் தலைவரும், முதுநிலை நிபுணருமான டாக்டர். செல்வமுத்துகுமரன், அத்துறையின் முதுநிலை மருத்துவர் டாக்டர் செந்தில்குமார். மயக்கவியல் துறையின் மருத்துவர் டாக்டர். ராஜேஷ் வெற்றிவேல், ஆகியோரின் சிறப்பான ஆதரவோடு இந்த அறுவைசிகிச்சைகள் இம்மருத்துவமனையின் மிக நவீன பைபிளேன் கேத் வேப்ல் செய்யப்பட்டன.




Brain aneurysms என்பவை, பல்வேறு காரணங்களினால் உருவாக்கி மூளையில் இரத்தநாளங்களில் காணப்படுகிற பலூன் போன்ற விரிவாக்கங்கள் ஆகும். இவைகளில் கிழிசல்/ பிளவு ஏற்படுமானால் மூளையின் உட்புறத்தில் உயிருக்கு ஆபத்தான இரத்தக்கசிவு ஏற்படும். இத்தகைய இரத்தநாள அழற்சிக்கு உரிய சிகிச்சை வழங்கப்படாவிடில் அந்த இரத்தநாளங்கள் கிழிவதற்கு அதிக சாத்தியம் இருக்கும் இது உயிருக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கக்கூடும். ஒவ்வொரு ஆண்டும் 1 இலட்சம் நபர்களில் சுமார் 5லிருந்து 10 நபர்களுக்கு கிழிசல் ஏற்படுகிற இரத்தநாள அழற்சி பாதிப்பு இருக்கிறது என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த இரு நடுத்தர வயது பெண் நோயாளிகளை பொறுத்தவரை, மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் அறுவை சிகிச்சை குழுவினரால் இந்நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை வழிமுறையை வழங்குவதற்காக இரத்தநாள அழற்சிகளுக்கு எண்டோவாஸ்குலர்காய்லிங் என அறியப்படும் நுண்துளை உத்தியை பயன்படுத்தினர். இதுவொரு குறைவான ஊடுருவலுள்ள மருத்துவச் செயல்முறையாகும்; தொடையில் உள்ள ஒரு இரத்தநாளத்தின் வழியாக சிறிய கதீட்டர்கள் உட்செலுத்தப்பட்டு மூளையின் இரத்தநாளங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அதன் பிறகு இரத்தநாள அழற்சி பகுதிக்கு உட்புறத்தில் சிறிய உலோக சுருள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் இரத்தநாள் அழற்சி பகுதிக்குள் இரத்தம் நுழைவதும் மற்றும் இரத்தநாள் கிழிசல் ஏற்படும் வாய்ப்பும் தடுக்கப்படுகிறது.

மீனாட்சி ஸ்பெஷாலிட்டி சூப்பர் மருத்துவமனையின் மூளை நரம்பியல் அறுவைசிகிச்சை நிபுணரான டாக்டர். கௌதம் குஞ் சா,இது குறித்து கூறியதாவது: "இந்தஇரு நோயாளிகளுக்கும் மூன்று இரத்தநாள அழற்சிகள் இருந்தன. மூளையின் ஆழமான அமைவிடங்களில் பலூன் போன்ற விரிவாக்கங்களாக இருந்த இந்த இரத்தநாளங்களில் கிழிசல் ஏற்படுமானால் மூளைக்குள் அது இரத்தக்கசிவை விளைவிக்கும் இப்பாதிப்பு நிலைக்கு சிகிச்சையளிக்கப்படாமல் விடப்படுமானால் இந்த இரத்தநாள அழற்சி மீண்டும் கிழிவதற்கும், சிதைவதற்கும் அதிக சாத்தியமிருக்கிறது; இதன் காரணமாக அவர்களின் உயிருக்கே பெரும் ஆபத்து ஏற்படக்கூடும். இந்த இரு நோயாளிகளுக்கும் இருந்த இரத்தநாள அழற்சிகளும் எண்டோவாஸ்குலர் அணுகுமுறை என்பதன் வழியாக வெற்றிகரமாக சுருளாக்கம் செய்யப்பட்டன. மருத்துவமனையின்நரம்பியல் அறுவை சிகிச்சைதுறையின் தலைவரும், முதுநிலை நிபுணருமான டாக்டர். செல்வமுத்துக்குமரன், இச் சிகிச்சையில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் குறித்து பேசுகையில், "திடீரென ஏற்பட்ட கடுமையான தலைவலி மற்றும் அதைத் தொடர்ந்து நினைவிழப்பு என்ற பிரச்சனைகளோடு இந்த இரு நோயாளிகளும் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். கிழிசல/ சிதைவு ஏற்பட்ட இரத்தநாள அழற்சிகளுக்கு முடிந்தவரை விரைவாக சிகிச்சையளிக்கப்பட வேண்டும். ஏனெனில் உரிய சிகிச்சையானது உரிய நேரத்திற்குள் அளிக்கப்படாவிட்டால் இரத்தக்குழாய்களில் மீண்டும் கிழிசல் ஏற்படக்கூடும் மற்றும் ஒவ்வொரு கிழிசலும் உயிரிழப்புக்கான வாய்ப்பை கணிசமாக அதிகரித்து விடும். இந்த இரு நோயாளிகளும் அவர்களது இயல்பான வாழ்க்கையை உற்சாகத்தோடு வாழ தொடங்கியிருக்கின்றனர்" என்று கூறினார். இந்த சந்திப்பு நிகழ்வின்போது இம்மருத்துவமனையைச் சேர்ந்த திலீப் உடனிருந்தார்.



# சேவை தொடங்கி 100 நாட்கள் நிறைவு; நாகைஇலங்கை கப்பலில் கூடுதல் லக்கேஜிக்கு அனுமதி: சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி

நாகப்பட்டினம், மே.18-

நாகையில் இருந்து இலங்கைக்கு பயணிகள் கப்பல் சேவையில், கூடுதல் லக்கேஜ் எடுத்து செல்ல ஒன்றிய, மாநில அரசுகள் அனுமதி அளித்துள்ளது. இது சுற்றுலா பயணிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு சுபம் நிறுவனம் சிவகங்கை என்ற பெயரில் கப்பல் போக்குவரத்தை தொடங்கியது. நேற்று (16ம் தேதி) 100வது நாள் ஆவதை முன்னிட்டு நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைக்கு புறப்பட்ட கப்பலில் 85 பயணிகள் பயணம் செய்தனர். இரு நாட்டு பயணிகளுக்கும் இனிப்பு வழங்கினர். இலங்கைக்கு கப்பல் புறப்படுவதற்கு முன்பு துறைமுக அதிகாரிகள், சுங்கத்துறை அதிகாரிகள் இயக்கும் சுபம் நிறுவன குழுமத்தினருக்கு சால்வை அணிவிக்கப்பட்டது. இதை தொடர்ந்து கொடியசைத்து வைத்து சிவகங்கை கப்பலை வழி அனுப்பி வைத்தனர்.

விமான கட்டணத்தை விட கப்பல் கட்டணம் குறைவாக இருப்பதால் கப்பலில் பயணம் செய்யும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஏற்கனவே பயணிகள் 10 கிலோ வரை லக்லேஜ் எடுத்து செல்ல அனுமதிக்கப்பட்டது. தற்போது 22 கிலோ வரை கூடுதலாக லக்கேஜ் எடுத்து செல்ல சுற்றுலா பயணிகளுக்கு ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் அனுமதி அளித்துள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது என சுபம் கப்பல் நிறுவனத்தினர் கூறினர். பயணிகளுக்கு பாதுகாப்பு நிறைவாக உள்ள வகையில் கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பயணிகளுக்கு புதுவித அனுபவத்தை இந்த பயணம் அள்ளித்தரும் என கேப்டன் ராஜாஜெகபர் கூறினார்.

# உண்மையான ஹீரோக்களுக்கான கனவு நிலம் "திட்டம்: தேசத்தின் மாவீரர்களை வணங்கி கவுரவிக்கும் ஜி ஸ்கொயர்

## அனைத்து ஜி ஸ்கொயர் திட்டங்களிலும் 15 சதவீத தள்ளுபடி வழங்குகிறது

மதுரை, மே.18-

நமது தேசத்தைப் பாதுகாக்கும் மகத்தான மற்றும் துணிச்சலான இந்திய ராணுவ வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் ஒரு இதயப்பூர்வமான திட்டத்தை இந்தியாவின் மிகப்பெரிய ரியல் எஸ்டேட் மேம்பாட்டு நிறுவனமான ஜி ஸ்கொயர் அறிவித்துள்ளது. " உண்மையான ஹீரோக்களுக்கான கனவு நிலம் " என்னும் இந்தத் திட்டத்தில் தென்னிந்தியா முழுவதும் உள்ள இதன் வீட்டு மனை திட்டங்களில் இடங்களை வாங்கும் இந்திய ராணுவ வீரர்களுக்கு 15 சதவீத சலுகையை விதிமுறைகளுக்கு உட்பட்டு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்க இருப்பதாக தெரிவித்துள்ளது.

இந்த சிறப்பு திட்டத்தை, இந்திய ராணுவம், கடற்படை, விமானப்படை மற்றும் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த வீரர்களின் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களின் தன்னலமற்ற சேவை, துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வைக் கௌரவிக்கும் வகையில் ஜி ஸ்கொயர் அறிவித்திருக்கிறது.

இந்த சலுகை திட்டமானது ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை உட்பட இந்திய ஆயுதப்படைகளில் பணியாற்றும் மற்றும் முன்னாள் படைவீரர்கள் அனைவருக்கும் அணிவிக்கப்படுகிறது. இடங்களை தங்கள் மனைவி மற்றும் குழந்தைகள் பெயரில் பதிவு செய்து கொள்ளலாம். முன்பதிவு செய்யும் போது அவர்களின் அதிகாரப்பூர்வ ராணுவ அடையாள அட்டையை காண்பிக்க வேண்டும்.

இது குறித்து ஜி ஸ்கொயர் ரியல்டர்ஸ் நிர்வாக இயக்குனர் பால ராமஜெயம் கூறுகையில், நமது படை வீரர்கள் எந்தவித சுயநலமும் இல்லாமல் தேசம் மற்றும் மக்களின் பாதுகாப்பு ஒன்றே தங்களின் ஒரே இலக்காகக் கொண்டு தங்கள் வாழ்க்கையை தேசத்திற்காக அர்ப்பணிக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களை போற்றி கௌரவிக்கும் விதமாக, அவர்களின் குடும்பத்தின் எதிர்காலத்திற்காக ஒரு அர்த்தமுள்ள முதலீடாக எங்களின் அனைத்து வீட்டு மனை திட்டங்களிலும் வாங்கும் இடங்களுக்கு 15 சதவீத சலுகையை வழங்க உள்ளோம். இது நமது சுதந்திரத்திற்காகப் போராடும் உண்மையான வீரர்களை கவுரவிப்பதற்கான எங்களின் ஒரு சிறிய முயற்சியாகும். இது அவர்களின் கனவு இல்லத்தை வாங்குவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று நம்புகிறோம் என்று தெரிவித்தார்.

உலகத்தரம் வாய்ந்த வசதிகள், எந்தவித வில்லங்கமும் இல்லாத தெளிவான ஆவணங்கள், ஒவ்வொரு நகரிலும் முக்கியமான இடங்கள் மற்றும் கட்டத் தயாராக உள்ள உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய வீட்டு மனைகளை சென்னை, ஐதராபாத், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, பொள்ளாச்சி, திருச்சி, ஓசூர், மைசூர், பல்லாரி, திண்டுக்கல், ஆம்பூர், தேனி மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில் இந்நிறுவனம் விற்பனை செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பதி ஏழுமலையானுக்கு 5 கிலோ தங்க ஹஸ்தங்கள் காணிக்கை

திருமலை, மே.18-

திருப்பதி ஏழுமலையானுக்கு கொல்கத்தாவை சேர்ந்த சஞ்சீவ் கோயங்கா எனும் பக்தர் 5.267 கிலோ எடையில் 2 தங்க ஹஸ்தங்களை (கைகள்) நேற்று காணிக்கையாக வழங்கினார்.

ரூ.3.63 கோடி மதிப்புடைய இந்த தங்க ஹஸ்தங்களை திருமலை திருப்பதி தேவஸ்தான கூடுதல் நிர்வாக அதிகாரி வெங்கய்ய சவுத்ரி பெற்றுக்கொண்டார். முன்னதாக ஏழுமலையானை சஞ்சீவ் கோயங்கா தரிசனம் செய்தார். அவருக்கு ரங்கநாயக மண்டபத்தில் தேவஸ்தான அதிகாரிகள் தீர்த்த பிரசாதங்கள் வழங்கி கவுரவித்தனர்.



# தெருநாய்கள் கடித்து புள்ளிமான் பலி

கும்மிடிப்பூண்டி, மே.18-

கும்மிடிப்பூண்டி பேரூராட்சி 11வது வார்டான மேட்டு தெருவில் திரவுபதி அம்மன் கோயில் உள்ளது. இதன் எதிரே இன்று காலை ஒரு புள்ளிமான் ரத்த காயங்களுடன் இறந்து கிடந்தது. இதை பார்த்ததும் அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்தனர். அப்போது, புள்ளிமானின் வாய்பகுதிகளில் தெருநாய்கள் கடித்து குதறியிருப்பதை கண்டறிந்தனர்.

நள்ளிரவில் உணவு, குடிநீர் தேடி வந்த புள்ளிமானை, தெருநாய்கள் கடித்ததில் புள்ளிமான் இறந்திருப்பது தெரியவந்தது. தகவலறிந்து கும்மிடிப்பூண்டி வனத்துறை மற்றும் போலீசார் விரைந்து சென்று இறந்த புள்ளிமானை மீட்டு சென்றனர். இதுகுறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர் கூட்டம் 17 பயனாளிகளுக்கு ரூ.1.78 லட்சத்து மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்

திருவாரூர், மே.18-

திருவாரூரில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டத்தில் 17 பயனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 78 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கலெக்டர் மோகனசந்திரன் வழங்கினார்.



திருவாரூர் மாவட்ட அளவிலான மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைதீர் கூட்டமானது நேற்று கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் மோகனசந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாற்றுத்திறனாளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்ட நிலையில் மனுக்கள் மீது துறை ரீதியாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு கலெக்டர் மோகனசந்திரன் உத்தரவிட்டார்.

பின்னர் அவர் பேசியதாவது, மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து அவரவர்க்கு தேவையான நலத்திட்ட உதவி குறித்த கோரிக்கை மனுக்கள் பெற்று தகுதியான கோரிக்கைகளுக்கு தீர்வுகாணும் வகையில் மாவட்ட அளவில் கலெக்டர் அலுவலகத்திலும், திருவாரூர் மற்றும் மன்னார்குடி கோட்ட அளவிலான சிறப்பு குறைதீர் கூட்டமானது ஆர்.டி.ஓ அலுவலகங்களிலும் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டு வருகிறது.

அதன்படி மாற்றுத்திறனாளிகளுக்காக அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. இதற்கு வயது வரம்பு ஏதும் இல்லை. 18 வயதிற்குகீழ் உள்ள வர்களும் விண்ணப்பம் அளிக்கலாம். மனுதாரர்களின் கோரிக்கைகள் அனைத்தும் அரசின் விதிகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்படுவதோடு, குறைகளுக்கு தீர்வுகாணும் வகையில் உள்ள மனுக்களுக்கு உரிய உதவிகள் வழங்கிட தக்க நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும்.

மேலும் தங்களது இருப்பிட முகவரிக்கான ஆதாரம், குடும்ப அட்டை நகல், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாளஅட்டை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை ஆகியவற்றின் நகலுடன், தற்போதைய புகைப்படம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள் ளப்படுகிறார்கள்.

இவ்வாறு கலெக்டர் மோகனசந்திரன் தெரிவித்துள்ளார். மேலும் தலா ரூ 11 ஆயிரத்து 760 வீதம் 10 நபர்களுக்கு ரூ ஒரு லட்சத்து 17 ஆயிரத்து 600 மதிப்பில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் மற்றும் தலா ரூ 8 ஆயிரத்து 750 வீதம் 7 நபர்களுக்கு ரூ 61 ஆயிரத்து 250 மதிப்பில் இயன் முறை உபகரணம் என மொத்தம் 17 நபர்களுக்கு ரூ ஒரு லட்சத்து 78 ஆயிரத்து 850 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் 7 நபர்களுக்கு இலவச வீட்டு மனைபட்டாவை கலெக்டர் மோகனசந்திரன் வழங்கினார். நிகழ்ச்சியில் டி.ஆர்.ஓ கலைவாணி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலஅலுவலர் புவனா மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழக அரசின் கல்பனா சாவ்லா விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

சென்னை, மே.18-

சுதந்திர தின விழாவின் போது, துணிவு மற்றும் சாகச செயல் புரிந்த வீரப் பெண்மணிக்கு வழங்கப்படும் கல்பனா சாவ்லா விருதுக்கு வரும் ஜூன் 16ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சுதந்திர தின விழாவின் போது, துணிவு மற்றும் சாகச செயல் புரிந்த வீரப் பெண் மணிக்கு கல்பனா சாவ்லா விருது தமிழக அரசால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது. வீர தீர செயல் புரிந்த பெண் ஒருவருக்கு ரூ. 5,00,000 ரொக்கப்பரிசுடன் தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் விருதாளருக்கு வழங்கப்படும்.



இதனைத் தொடர்ந்து 2025ம் ஆண்டு சுதந்திர தின விழாவின் போது, கல்பனா சாவ்லா விருது வழங்கப்படவுள்ளதால், இவ்விருதுக்கான விண்ணப்ப விவரங்கள் அனைத்தும் மே 16 முதல் தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் (https://awards.tn.gov.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

கல்பனா சாவ்லா விருது பெற இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க வேண்டியவர்களின் தகுதிகள் :

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராகவும், 18 வயதுக்கு மேற்பட்ட வராகவும் இருத்தல் வேண்டும்.

தைரியம் மற்றும் துணிச்சலான செயல்களை புரிந்திருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் தமிழக அரசு விருதுகள் இணையதளத்தில் (https://awards.tn.gov.in) தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் மே 16 முதல் ஜூன் 16 வரை பதிவு செய்ய வேண்டும்.

இணையதளத்தில் விண்ணப்பித்தவர்கள் சம்மந்தப்பட்ட மாவட்ட சமூக நல அலுவலகத்தில் நேரில் சென்று ஒப்படைக்க வேண்டியவை : விண்ணப்பதாரின் கருத்துரு (Booklet - 4) தமிழ் 2 ஆங்கிலம்2 புத்தக வடிவத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும். பக்கம் எண்ணுடன் கூடிய உள்ளடக்க அட்டவணை (Index) விண்ணப்பதாரரின் வாழ்க்கை வரலாறு மற்றும் பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் 2

இணைப்பு படிவம் I & II, தமிழ் (மருதம் எழுத்துருவில்) மற்றும் ஆங்கிலம் முழுவதுமாக பூர்த்தி செய்திருக்க வேண்டும்.(Soft copy & Hard copy)

தைரியம் மற்றும் துணிச்சலுடன் மேற்கொண்ட அனுபவத்தை பற்றி ஒருபக்க எழுத்து விளக்கம்.


படிவம் 1 மற்றும் 2 முழுமையாக நிரப்பப்பட வேண்டும் (தமிழில் மருதம் எழுத்துரு, ஆங்கிலத்தில் வர்டானா எழுத்துரு)

எனவே, அனைத்து மாவட்டங்களிலும், துணிவு மற்றும் சாகச செயல் புரிந்த வீரப் பெண்மணிக்கு கல்பனா சாவ்லா விருது வழங்கிட ஏதுவாக, இணையதளத்தின் மூலம் வருகின்ற ஜூன் 16ம் தேதிக்குள் கருத்துருக்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது, என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# கர்நாடகாவில் கனமழை: காவிரியில் இருந்து தமிழகத்துக்கு நீர்வரத்து அதிகரிப்பு

பெங்களூரு, மே.18-

கர்நாடகாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்து வருவதால் காவிரி ஆற்றில் இருந்து தமிழகத்துக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.



கர்நாடக மாநிலத்தில் கடந்த ஒரு வாரமாக கோடை மழை பெய்துவருகிறது. குடகு, மைசூரு, மண்டியா, ராம்நகர் உள்ளிட்ட காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் காவிரி ஆற்றில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் கிருஷ்ணராஜசாகர், கபினி ஆகிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதனிடையே மேகேதாட்டு, கனகபுரா, பிலிகுண்டுலு உள்ளிட்ட வனப்பகுதிகளில் கனமழை பெய்ததால் காவிரியின் துணை நதிகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் கோடை காலத்திலும் காவிரியில் வெள்ளம் பாய்வதை காண முடிகிறது.

கர்நாடக தமிழக எல்லையான பிலிகுண்டுலு வழியாக தமிழகத்துக்கு நேற்று முன்தினம் வரை 700 கன அடி நீர் சென்று கொண்டிருந்தது. இந்நிலையில் நேற்று கனமழை காரணமாக தமிழகத்துக்கு செல்லும் நீரின் அளவு 5 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால் எல்லையோர தமிழக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# 24.05.2025 அன்று நடைபெறவுள்ள மெகா வேலைவாய்ப்பு முகாம் 100 சதவீதம் வெற்றிபெற முழுஒத்துழைப்பு வழங்கிட வேண்டும்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா பத்திரிக்கை மற்றும் ஊடக செய்தியாளர்களுடன் கலந்துரையாடல்



கன்னியாகுமரி, மே.18-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம், நான் முதல்வன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (TN Skills), தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மற்றும் அஸ்கார்டியா பவுண்டேஷன் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, மாவட்ட ஆட்சியர் அலுவலக குறள் கூட்டரங்களில் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மூன்று மாதத்திற்கு மேலாக இந்த வேலை வாய்ப்பு முகாம் நடத்த பல்வேறு பணிகள் மேற்கொண்டு தற்போது தமிழ் நாடு திறன் மேம்பாட்டு கழகம் அதாவது நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக பல்வேறு முன்னணி நிறுவனங்கள் கலந்து கொள்ளும் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமானது நான் முதல்வன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (TN Skills), தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் மற்றும் அஸ்கார்டியா பவுண்டேஷன் இணைந்து நடத்தும் மாபெரும் சிறப்பு தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது.

அதனடிப்படையில் இப்போது நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 40க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் கலந்து கொள்ள உள்ளன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் ஆனது தமிழ்நாட்டில் திருச்சி, சென்னை, கோயம்புத்தூர், மதுரை உள்ளிட்ட நான்கு இடங்களில் தான் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தியுள்ளனர். நமது மாவட்டத்தில் குறைவான தொழில் நிறுவனங்கள் உள்ளதால் நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக நாம் இந்த முகாம் நடத்துவதன் வாயிலாக நமது மாவட்டத்திற்கு உட்பட்ட இளைஞர்கள் வெளி மாவட்ட ங்களில் உள்ள முன்னணி நிறுவன ங்களில் பணிபுரியும் வாய்ப்பு உருவாகும். கல்லூரி படிப்பு படிக்கும் போதே கேம்பஸ் இன்டர்வியூ வாயிலாக முன்னணி நிறுவனங்களில் பணியில் சேர்வார்கள். இந்த தனியார் வேலை வாய்ப்பு முகாமில் 6500 க்கும் மேற்பட்ட காலி பணியிடங்கள் உள்ளன. முகாமில் கலந்து கொள்ளும் நிறுவனங்கள் அனைத்தும் சென்னை சுற்றியுள்ள பகுதிகள், கோவை ஒரகடம், கிருஷ்ணகிரி, ஒசூர், திருச்சி மற்றும் பெரம்பலூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ளன.

குறிப்பாக 2023, 2024, 2025ம் கல்வியாண்டில் கலை மற்றும் அறிவியல் படிப்புகள், இளங்கலை பொறியியல் (பி.இ) இளங்கலை தொழில் நுட்பம் (பி.டெக்), ஐ.டி.ஐ, தொழில்நுட்ப படிப்பு படித்தவர்கள், ஆசிரியர்படிப்பு படித்தவர்கள் உள்ளிட்டவ ர்கள் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப் படுகிறது. தொழில்நுட்ப கல்லூரி, பொறியியல், ஐ.டி.ஐ மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவர்கள் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்துகொள்ள தகுதியுடையவர்கள். படித்து முடித்த மாணவ ர்களில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் சான்றிதழ்கள் பெற்றுள்ள மாணவர்களுக்கு இவ்வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெறுவதற்கு மிகப்பெரிய வாய்ப்பு உள்ளது. 18 வயது முதல் 34 வயதுக்குட்பட்டவர்கள் இம்முகாமில் கலந்து கொள்ளலாம். இம்முகா மில் கலந்து கொண்டு வேலைவாய்ப்பு பெறும் அனைவரும் அந்நிறுவனத்தின் நிரந்தர பணியாளர்கள் ஆவார்கள்.

இந்த வேலைவாய்ப்பு முகாமினை பயனுள்ளதாக அமைத்திடும் வகையில் நாகர்கோவில் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட் சிகள், பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்துநிலையங்கள், கல்லூரிகள், ஆலயங்கள், கடலோர பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் பொதுமக்களிடையே வேலைவாய்ப்பு முகாம் குறித்து வாகன பிரச்சாரம், விளம்பர பதாகைகள், உள்ளூர் தொலைக்காட்சிகள், வானொலி வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்படுகிறது. மேலும் பேருந்துகளில் கியூர் கோடு ஒட்டி விளம்பர செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முகாமில் கலந்துகொள்ளபவர்களுக்கு வடசேரி மற்றும் அண்ணா பேருந்துநிலையங்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படவுள்ளது. முகாமிற்கு கலந்து கொள்ளும் இளைஞர்களுக்கு நேர்காணல் நடைபெறும் பகுதிகள் குறித்த வழிகாட்டி பதாகைகள் வைக்கப்பதன் மூலம் காலவிரயம் தவிர்க்கப்படும். நடைபெறவுள்ள முகாமானது 24.05.2025 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் https://bit.ly/kkmjf2025 என்ற இணையத்தளத்தின் வாயிலாக முன்பதிவு செய்யதவர்களும், முன்பதிவு செய்யமால் வேலைவாய்ப்பு முகாமில் கலந்துக்கொள்பவர்கள் காலை 8:30 மணிக்கு நாகர்கோவில் பொன்ஜெஸ்லி கல்லூரியில் அன்றைய தினம் அமைக்கப்பட்டுள்ள பதிவு மையத்தில் பதிவுசெய்யவேண்டும். மேலும் விவரங்களுக்கு 7200722996, 9385614058, 8667511342 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்துகொள்ளலாம். இந்த வேலைவாய்ப்பு முகாமில் நமது மாவட்டம் மட்டுமல்லாது தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி உள்ளிட்ட பிற மாவட்டங்களிலிருந்தும் இளைஞர்கள் கலந்துகொள்ளலாம். படித்து வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். மேலும் பத்திரிக்கை மற்றும் ஊடக நிறுவனங்களின் வாயிலாக நடைபெறவுள்ள வேலைவாய்ப்பு முகாமினை 100 சதவீதம் பொதுமக்களுக்கு சென்றடைய ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. எஸ்.காளீஸ்வரி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.ஜாண் ஜெகத் பிறைட், உசூர் மேலாளர் (நிதியியல்) சுப்பிரமணியம், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) எஸ்.செல்வலெட் சுஷ்மா, வேலைவாய்ப்பு முகாம் ஒருங்கிணைப்பாளர் ராகுல், உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# பெருங்களத்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் நான்காண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்




பெருங்களத்தூர், மே.17-

காஞ்சி வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம். தாம்பரம் மாமன்ற உறுப்பினர்களின் குழு தலைவர் பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர் தலைமையில். பெருங்களத்தூர் தெற்கு பகுதி துணைச் செயலாளர் பி.புகழேந்தி வரவேற்பிலும் இதில் சிறப்பு அழைப்பாளர்களாராக தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகர துணைச் செயலாளர் மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், தலைமை கழக பேச்சாளர்கள் தா.ஜெகதீசன், பம்மல் தினேஷ், தேர்தல் தொகுதி பார்வையாளர் பருதி இளம் ஸ்ருதி, வட்ட செயலாளர்கள் எஸ்.ஐசக், வெங்கடேசன், சஞ்சீவி, சுரேஷ், மஞ்சுநாதன், இளைஞரணி அமைப்பாளர் ஆர்.ஓம்.பிரகாஷ் பகுதி பொருளாளர் ஜே.மணிவ ண்ணன், மாநகரப் பிரதிநிதி கே.சுந்தர், கோட்டி, பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் டி.ராஜேஷ் பெருங்களத்தூர் தெற்கு பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், பகுதி இளைஞரணி மாணவரணி அணிகளின் நிர்வாகிகள். வட்ட கழக நிர்வாகிகள் கழக மூத்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



# நீடாமங்கலம் பகுதியில் அறுவடைக்கு தயாராகவுள்ள 20,000 ஏக்கர் நெற்பயிர்

நீடாமங்கலம், மே.18-

நீடாமங்கலம் வேளாண் கோட்ட பகுதியில் கோடை சாகுபடி செய்துள்ள நெல் பயிர்கள் அறுவடைக்கு தயாராக உள்ளது. திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண் கோட்ட பகுதியில் சுமார் 20,000 ஏக்கரில் கோடை சாகுபடி நெல் பயிர் நிலத்தடி நீரில் மின் மோட்டாரை பயன் படுத்தி விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்நிலையில் விவசாயிகள் கோடை சாகுபடி செய்துள்ள சித்தமல்லி மேல் பாதி, கடம்பூர், பரப்பனா மேடு, காளாச்சேரி, பூவனூர், ராயபுரம், ராஜப்பையன், சாவடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கோடை சாகுபடியை நிலத்தடி நீரை பயன்படுத்தி மின் மோட்டாரில் சாகுபடி விவசாயிகள் சுமார் 20,000 ஏக்கரில் சாகுபடி செய்துவரும் நெல் பயிர்கள் தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# புதுக்கோட்டை மாவட்டம் வல்லத்திரா கோட்டை இராமசாமி தெய்வானை அம்மாள் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவிகள் 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்று பாரட்டு

புதுக்கோட்டை, மே.18-

தமிழகத்தில் நேற்று 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் வல்லத்திரா கோட்டை இராமசாமி தெய்வானை அம்மாள் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி சஹானா 476/500 மதிப்பெண்கள் பெற்று முதலிடமும். மதிவதனி 474/500 மதிப்பெண்கள் பெற்று இரடண்டாம் இடமும். பவித்ரா. தாரணி ஆகிய இருவரும் தலா . 473/500 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடங்களும் பெற்று தங்களது பள்ளிக்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பெருமை சேர்த்தனர் குறிப்பாக 400 மதிப்பெண்களுக்கு மோல் 15 .ந்து மாணவ மாணவிகளை பள்ளிக்கு பெருமை சேர்த்தனர். பள்ளி தலைமை ஆசிரியர் குமார் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவிகளை வாழ்த்திப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார் இந்நிகழ்வில் மாணவிகளின் பெற்றோர்களும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு பள்ளிக்கு பெருமை தேடித்தந்த மாணவிகளைப் பாரட்டினர்கள்



# தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 54வது வார்டு அதிமுக சார்பில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது

தாம்பரம், மே.18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 54வது வார்டு சார்பில் அதிமுக முன்னாள் முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர் புரட்சித்தமிழர் எடப்பாடி யார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தாம்பரம் மேற்கு பகுதி 54வது வட்ட அதிமுக சார்பில் ஏ.சி.எஸ். இலவச மருத்துவ முகாம் தாம்பரம் தனியார் திருமண மண்டபத்தில் 54வது வார்டு மாமன்ற உறுப்பினர் தாம்பரம் மேற்கு பகுதி துணை செயலாளருமான ஸ்டார் பிரபா ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன் சிறப்பு அழைப்பாளராக கழக வர்த்தக அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் சீதா செல்ல பாண்டியன் அனைத்து உலகை எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் நாவலூர் முத்து செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு இலவச மருத்துவ முகாமை பொதுமக்களுக்கு துவங்கி வைத்தனர் இதில் பகுதி கழக செயலாளர்கள் ஏ.கோபிநாதன், எம்.கூத்தன், எல்லார் செழியன், 54வது கிழக்கு வட்ட கழகச் செயலாளர் கே.பி.ராஜமாணிக்கம் 54வது மேற்கு வட்ட கழக செயலாளர் எம்.ஆர்.எல் ஜெயரத்தினம் பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர் மற்றும் பொதுமக்கள் உட்பட்ட ஏராளமான கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# மலை ரயிலில் பயணிக்க சுற்றுலா பயணிகள் ஆர்வம்

ஊட்டி, மே.18-

கோடை சீசனுக்காக ஊட்டி வரக்கூடிய சுற்றுலா பயணிகள் மலை ரயிலில் பயணிக்க ஆர்வம் காட்டி வருகின்றனர். நீலகிரி மாவட்டம் ஊட்டி சர்வதேச சுற்றுலா நகரமாக விளங்கி வருகிறது. மேட்டுப்பாளையம் முதல் ஊட்டி வரை இயக்கப்படும் நூற்றாண்டு பழமை வாய்ந்த மலை ரயிலில் பயணிக்க பிற மாநிலங்களில் இருந்து மட்டுமின்றி, பல்வேறு வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகளும் ஆர்வம் காட்டுகின்றனர்.

குறிப்பாக ஏப்ரல், மே மாதங்களில் கடைபிடிக்கப்படும் கோடை சீசன், செப்டம்பர் அக்டோர் மாதங்களில் கடைபிடிக்கப்படும் போது சுற்றுலா பயணிகள் அதிகளவு ஊட்டிக்கு வருவது வழக்கம். அவ்வாறு வரக்கூடிய சுற்றுலா பயணிகள் முன்கூட்டியே முன்பதிவு செய்து ஊட்டி மலை ரயிலில் பயணித்து இயற்கை காட்சிகளை பார்வையிட்டு மகிழ்வார்கள். சீசனின் போது தென்னக ரயில்வே சேலம் கோட்டம் சார்பில் சிறப்பு ரயில் இயக்கப்படுவது வாடிக்கை.

இந்நிலையில் நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன்களை கட்டியுள்ள நிலையில் சுற்றுலா பயணிகள் இபாஸ் பெற்று ஊட்டி வந்த வண்ணம் உள்ளனர். அதற்கேற்ப ஊட்டி - குன்னூர், ஊட்டி - கேத்தி இடையே சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

ஊட்டி வர கூடிய சுற்றுலா பயணிகள் சிறப்பு மலை ரயிலில் பயணித்து மகிழ்ந்து வருகின்றனர். இதனால் ஊட்டி ரயில் நிலையத்தில் எப்போதும் கூட்டம் காணப்படுகிறது. மேலும் அங்குள்ள பழமை வாய்ந்த ரயில் என்ஜின் முன் நின்று புகைப்படமும் எடுத்து மகிழ்கின்றனர்.




# ஊரப்பாக்கத்தில் தமிழக முதலமைச்சரின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் திமுக எம்எல்ஏ பங்கேற்பு

கூடுவாஞ்சேரி, மே.18-

செங்கல்பட்டு மாவட்டம் ஊரப்பாக்கத்தில் தமிழக முதலமைச்சரின் நான்காண்டு சாதனையை முன்னிட்டு நடைபெற்ற விளக்க பொதுக்கூட்டத்தில் திமுக எம்எல்ஏ பங்கேற்றார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழக முதலமைச்சரின் நான்காண்டு சாதனையை முன்னிட்டு விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் வடக்கு ஒன்றிய செயலாளர் எம்.டி. லோகநாதன் தலைமை தாங்கினார். ஊரப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் பவானிகார்த்தி, துணை தலைவர் ரேகாகார்த்திக், ஒன்றிய உறுப்பினர்கள் ஸ்ரீகாந்த், குணா, ஏ.ஜே. ஆறுமுகம், ராஜேந்திரன், பொன்னுசாமி, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர்கள் ஜான்தினகரன், கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக தலைமை கழக பேச்சாளர்கள் ஒப்பில்லாமணி, ஸ்ரீலேகா, செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ வரலட்சுமிமதுசூதனன், ஒன்றிய குழு பெருந் தலைவர் உதயாகருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டு தமிழக முதலமைச்சரின் நான்காண்டு சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினர். இதில் நிர்வாகிகள் ஜெகன்தேவேந்திரன், ராஜன்ஆறுமுகம், இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.எஸ். கார்த்திக், கிளை செயலாளர்கள், மாணவர் அணி, மகளிர் அணி, இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161